30.01.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### உழவர் பண்ணை பள்ளி தொடக்கம்

சிங்கம்புணரி வட்டாரத்தில் கிருங்காக்கோட்டை மற்றும் மு.அய்யாபட்டி கிராமங்களில் உழவர் பண்ணை பள்ளி தொடக்க விழா நடைபெற்றது.

உளுந்து மற்றும் நிலக்கடலை பயிரிடும் உழவர்களுக்கான உழவர் பண்ணைப் பள்ளி தொடக்க விழாவிற்கு குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் செந்தூர்குமரன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் கணேசன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் 25 உழவர்களுக்கு 6 வாரம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. முனைவர்கள் விமலேந்திரன், செல்வன் ஆகியோர் பயிற்சி அளிக்கின்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோபாலன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

### வனத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர் முகாம்

கோவை மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் வனத் துறை சார்பில் குறைதீர் மூகாம் நடத்தப்படவுள்ளதாக வனத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை மாவட்டத்தில் கோவை, போளுவாம்பட்டி, பெரியநாயக்கன்பாளையம், சிறுமுகை, காரமடை, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட ஆறு வனச்சரகங்கள் உள்ளன.

இந்த சரகங்களுக்கு உள்பட்ட பகுதிகளில் வன விலங்குகளால் விவசாய நிலங்கள் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், விவசாயிகளின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்யும் விதமாக மண்டல வனப் பாதுகாவலர் ஐ.அன்வர்தீன் உத்தரவின்படி, விவசாயிகள் குறைதீர் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் பெரியநாயக்கன்பாளையம் வன சரக அலுவலகத்தில் மாவட்ட வனப் பாதுகாப்பு அலுவலர் சி.ஹெச்.பத்மா (பொறுப்பு) தலைமையில் இந்த குறைதீர் முகாம் நடைபெறும்.

இதில், கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்து கொள்ளலாம். மேலும், இந்த முகாமில் வனச்சரகர்கள், வனவர்கள் உள்ளிட்ட வனத் துறை அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

## தேயிலைத் தூள் விலை ரூ.6 உயர்வு

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் அனைத்து தேயிலை ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 4-ஆவது ஏலம் குறித்த சந்தை நிலவரம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. இதில், மொத்தம் 2 லட்சத்து 48 ஆயிரத்து 36 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. அதில், இலை ரகம் 1 லட்சத்து 48 ஆயிரத்து 601 கிலோவும், டஸ்ட் ரகம் 99 ஆயிரத்து 485 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்து இருந்தால் அனைத்து ரகங்களுக்கும் கிலோவுக்கு ரூ.6 வரை விலை அதிகரித்துள்ளது. மேலும், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அனைத்து தேயிலைத் தூள்களும் விற்பனையாகியுள்ளன.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண ரகம் கிலோவுக்கு ரூ.65 முதல் ரூ.73 வரையிலும், உயர் ரகம் ரூ. 85 முதல் ரூ. 90 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் ரூ.75 முதல் ரூ.80 வரையிலும், உயர் வகை ரூ.80 முதல் ரூ.85 வரை விலை கிடைத்தது. தேயிலைத் தூள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம்: அரியலூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை

அரியலூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

விவசாயிகள் சங்க முன்னாள் மாவட்ட செயலர் நல்லுசாமி: அரியலூர் மாவட்டத்தில் நெல் அறுவடை தொடங்கியுள்ளது. பனிப் பொழிவு அதிகமாக இருப்பதால், நெல் ஈரப்பதமாக காணப்பட்டாலும் அதை நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்து அரசு கொள்முதல் செய்ய முன்வர வேண்டும். இதன்மூலம் தனியார் வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதை தவிர்க்க முடியும்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஸ்வநாதன்: பயிர்களுக்கான காப்பீடு பிரீமியத்தை அரசே செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். அரியலூரில் சம்பங்கி பூவிலிருந்து வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் வாரணவாசி ராஜேந்திரன்: அரியலூர் மாவட்டத்திலுள்ள பொன்னேரி, கரைவெட்டி ஏரி, கண்டிராதித்தம் ஏரி, சுக்கிரனேரி உள்ளிட்ட ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை உயர்நீதிமன்ற ஆணைப்படி அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரியலூர் மாவட்டத்தில் வெள்ள நிவாரண தொகை இன்னும் வழங்கப்படாமல் உள்ள விவசாயிகளுக்கு விரைவில் அதை வழங்க வேண்டும். மருதையாற்று படுகையில் வைக்கப்பட்ட தேக்கு மரக்கன்றுகளை பாதுகாவலரை நியமித்து பராமரிக்க வேண்டும்.

தமிழக அம்பேத்கர் விவசாயிகள் இயக்க மாநில தலைவர் அம்பேத்கர் வழியன்: அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிட ஆற்றின் குறுக்கே

திருமானூர், திருமழப்பாடி, குருவாடி, ஏலாக்குறிச்சி உள்ளிட்ட இடங்களில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்தார் மாவட்ட ஆட்சியர் சரவணவேல்ராஜ்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பா. இரவீந்திரன், வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம், துணை இயக்குநர் (தோட்டக்கலை) கணேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ. செந்தில், இணைபதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பாபு மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**பண்ணைப் பள்ளி பயிற்சி**

திருக்கடையூர் அருகேயுள்ள அன்னப்பன்பேட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கான பண்ணைப் பள்ளி பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

பண்ணைப் பள்ளி தொடக்க நிகழ்ச்சிக்கு செம்பனார்கோயில் வேளாண்மை உதவி இயக்குநர் சோ.வெற்றிவேலன் தலைமை வகித்தார்.

ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.திருமுருகன் வரவேற்றார்.

செம்பனார்கோயில் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) சார்பில் 2015-16 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட அன்னப்பன்பேட்டை, ஆக்கூர், கிள்ளியூர், கிடங்கல், தலையுடையார், கோயில்பத்து உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நாகை வேளாண்மை துணை இயக்குநர் டி. கணேசன் பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு வயல்களில் நவீன தொழில்நுட்ப முறையில் பூச்சிகளைப் பிடிப்பதற்கான பல்வேறு உபகரணங்கள் அடங்கிய பைகளை வழங்கினார்.

வேளாண் அலுவலர் ப.கனகம், விதைச் சான்று அலுவலர் எழிலராஜா, உதவி விதை அலுவலர் டி. உமாபசுபதி, உதவி தொழில்நுட்ப மேலாளர் ச.பார்த்திபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

"மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும்'

பெரம்பலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் கே. நந்தகுமார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்த மாவட்ட ஆட்சியர் பேசியது:

வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி பயிர்களுக்கு ரூ. 1510.38 லட்சமும், வெங்காயம் மற்றும் மரவள்ளி பயிர்களுக்கு ரூ. 1161.96 லட்சமும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஜன. 7ஆம் தேதி முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பருத்தி கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வெளி மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை நிலையத்திற்கு பருத்தியை கொண்டுவந்து உரிய விலைக்கு விற்பனை செய்து பயனடையலாம்.

வேளாண் விரிவாக்க மையங்களில் நெல் 9.935 மெ.டன், பயறுவகை விதைகள் 4.876 மெ.டன் உள்ளிட்ட விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை மையங்களில் போதுமான அளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், யூரியா 587 மெ.டன், டி.ஏ.பி. 337 மெ.டன், பொட்டாஷ் 375 மெ.டன் மற்றும் என்.பி.கே. 583 மெ.டன் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு உள்ளது என்றார் ஆட்சியர் கே. நந்தகுமார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச. மீனாட்சி, வேளாண் இணை இயக்குநர் (பொ) சு. அய்யாசாமி, கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் சிவ. முத்துகுமாரசாமி மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

## நீர்ப்பாசனக் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு பயிற்சி

நீர்ப்பாசனம் குறித்த 5-ஆவது கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடுவோருக்கானப் பயிற்சி முகாம் காரைக்காலில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காரைக்கால் பொதுப்பணித் துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் இ.வல்லவன் தொடங்கி வைத்தார்.

இப்பயிற்சி வகுப்பில், காரைக்கால் வருவாய்த் துறையில் பணியாற்றும் மாவட்டத் துணை ஆட்சியர் எஸ்.மாணிக்கதீபன், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் என காரைக்கால் மாவட்டத்தில் நீர்ப்பாசனம் குறித்த கணக்கெடுப்பில் ஈடுபட உள்ள 55 பேர் கலந்துகொண்டு, பயிற்சி பெற்றனர்.

மத்திய நீர்வள அமைச்சகத்தை சேர்ந்த மூத்த விஞ்ஞானி உமாபாரதி சிறப்புப் பிரதிநிதியாக கலந்துகொண்டு, காரைக்காலில் நீர்ப்பாசன வசதிகள், சாகுபடி செய்யப்படும் பயிர்கள், நீரைப் பயன்படுத்தும் முறை, சேமிக்கும் முறைகள் குறித்த விவரங்களை எவ்வாறு கணக்கெடுப்பது என்பது குறித்து விளக்கமளித்தார்.

இந்தப் பயிற்சி குறித்து, பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது:

கடந்த 2006-2007 ஆம் ஆண்டு 4-ஆவது நீர்ப்பாசன கணக்கெடுப்பு நடைபெற்றது. இதனடிப்படையில் மத்திய, மாநில அரசுகள், நீர் தேவை, நீர் சேமிப்பு, நீரை கையாளும் முறைகள் குறித்து திட்டமிட முடிந்தது. தற்போது 2014-2015-ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசனத் திட்டம் குறித்த கணக்கெடுப்பு தொடங்கியுள்ளது. காரைக்கால் மாவட்டத்தில் கணக்கெடுப்புப் பணி பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி வரை நடைபெறும். இதில், ஆழ்குழாய் கிணறு, குளம், ஆறு, வாய்க்கால்கள், ஏரி குறித்த கணக்கெடுப்பு துல்லியமாக எடுக்கப்படும். இந்தக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு, விவரங்களைத் தருவோர் தெளிவாகத் தரவேண்டும் பின்னர், கணக்கெடுப்பு குறித்த அறிக்கை மத்திய நீர்வள அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றனர்.

பொதுப்பணித் துறை செயற்பொறியாளர்கள் ஏ.ராஜசேகரன், ராமதாஸ், உதவிப் பொறியாளர்கள் கே.வீரசெல்வம், அசோக்குமார், அன்பழகன், கூடுதல் வேளாண் இயக்குநர் கா.மதியழகன் உள்ளிட்டோர் முகாமில் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நெல்சாகுபடி பாதிப்பால் குத்தகை கட்டணம் குறைப்பு

டி.என்.பாளையம்: டி.என்.பாளையம் பகுதியில், முதல்போக நெல்சாகுபடியில் ஏற்பட்ட பாதிப்பால், நெல்வயல் குத்தகை தொகை குறைந்தது. டி.என்.பாளையம் ஒன்றியம், தடப்பள்ளி அரக்கன்கோட்டை பகுதியில், 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நஞ்சை நிலங்களில் நெல், வாழை சாகுபடி செய்யப்படுகிறது. பெரிய கொடிவேரி, மோதூர், ஏழூர், டி.என்.பாளையம், வாணிப்புத்தூர், நஞ்சை புளியம்பட்டி, கள்ளிப்பட்டி, கொண்டையம்பாளையம் உள்ளிட்ட, 50க்கும் மேற்பட்ட ஊர்களில், முதல்போக நெல் அறுவடை அண்மையில் நடந்தது. முதல்போக

நெல்சாகுபடியின் போது, நெற்பயிர் பூப்பிடிக்கும் தருவாயில் மழை பெய்து, நெற்கதிர்கள் வளர்வதில் பாதிப்பு ஏற்பட்டதால், தற்போது நடந்த அறுவடையில் மகசூல் குறைந்தது. இதனால், குத்தகைதாரருக்கு நஷ்டம் ஏற்பட்டதால், ஏக்கருக்கு, 20 ஆயிரமாக இருந்த குத்தகைத் தொகை, 10 ஆயிரமாக குறைக்கப்பட்டது.

## விவசாய நிலங்களில் இழந்த மண்வளம் மீண்டு(ம்) வரும்! கோதுமை சாகுபடி செய்தால் பலன் நிச்சயம்

ஊட்டி: 'நீலகிரி விவசாய நிலங்களில், இழந்த மண் வளத்தை மீண்டும் பெற, கோதுமை சாகுபடி சரியான தீர்வு' என, தெரிவிக்கப்பட்டது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் வெலிங்டன் மண்டல நிலையம் சார்பில்,

கெந்தொரை கிராமத்தில், கோதுமை சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது. நிலைய தலைவர் டாக்டர் சிவசாமி பேசுகையில், “கெந்தொரையில், சிறப்பான முறையில், கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது; மாவட்டம் முழுக்க விரிவுப்படுத்த வேண்டும்,” என்றார். மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி பேசுகையில்,“தோட்டக்கலை துறை மூலம் கோதுமை சாகுபடியை பரவலாக்க முயற்சி மேற்கொள்ளப்படும்,” என்றார்.

இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு, ஆராய்ச்சி மைய ஊட்டி நிலைய முதன்மை விஞ்ஞானி டாக்டர் கண்ணன் பேசியதாவது: அங்கக சத்து தான் (இயற்கை சத்து), விவசாய நிலத்தின் ஆதாரம்; வெப்பம் குறைந்த நீலகிரியில் உள்ள விவசாய நிலங்களில், அங்கக சத்து, 1.5 -- 2.5 சதவீதம் இருக்கும்.

சமவெளி பகுதிகளில், அங்கக சத்து, கால், அரை சதவீதம் மட்டுமே இருக்கும். விவசாய நிலங்களில் அதிகளவில் பூச்சிக் கொல்லி மருந்து,

உரங்கள் இடுவதன் மூலம், அங்கக சத்து குறைந்து, மண் வளம் கெடும். மண், நீர் வள ஆராய்ச்சி மையத்தில், கோதுமை பயிரிடப்பட்ட நிலத்தில் மறு உழவு செய்யாமல், உருளைக்கிழங்கு சாகுபடி செய்தோம்; 40 சதவீத கூடுதல் மகசூல் கிடைத்தது. கோதுமை உட்பட தானிய பயிர்களை விவசாய நிலங்களில் மறு சுழற்சி அடிப்படையில் சாகுபடி செய்வதன் மூலம், மண்ணில் உள்ள அங்கக சத்தின் அளவு அதிகரிக்கும். அங்கக சத்தின் அளவு, 5 சதவீதத்தை எட்டிவிட்டால், அந்த நிலத்துக்கு உரம், பூச்சிக் கொல்லி மருந்து தேவையில்லை; தானாகவே, இயற்கை வேளாண்மைக்கு உகந்த நிலமாக மாறிவிடும். இவ்வாறு, கண்ணன் பேசினார். இந்திய வேளாண்மை ஆராய் ச்சி நிறுவன வெலிங்டன் மண்டல நிலையம் விஞ்ஞானி நல்லதம்பி பேசுகையில்,

“கெந்தொரையில், கோதுமை ஆராய்ச்சி மையத்தில் இருந்து வழங்கப்பட்ட கோதுமை விதை யை பயிரிட்டதன் மூலம், துரு நோயின் தாக்குதல், 95 சதவீதம் குறைந்துள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த கோதுமை ரகங்கள் தான், வெலிங்டன் மண்டல நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது,” என்றார்.

## மூலிகை செடிகளை பாதுகாக்க வேண்டும் மாணவர்களுக்கான சிறப்பு முகாமில் அறிவுரை

கூடலுார்: 'கூடலுார், பகுதியில் அழிவின் பிடியில் உள்ள மூலிகை செடிகளை மாணவர்கள் பாதுகாக்க வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டது.

கூடலுார் அரசு மேல்நிலைப் பள்ளியில், அழிந்து வரும் மூலிகைச் செடிகளை பாதுகாப்பது குறித்து சிறப்பு முகாம் நடந்தது. முகாமுக்கு, தலைமை ஆசிரியர் ராபர்ட் தலைமை வகித்து, மூலிகை செடிகளின் பயன்கள் குறித்து, மாணவர்கள் அறிந்து கொள்வதன் அவசியம் குறித்து விளக்கினார்.

நெஸ்ட் அறக்கட்டளை நிர்வாகி சிவதாஸ் பேசுகையில்,“கூடலுாரில் இயற்கையாகவே, அதிகளவில் மூலிகை செடிகள் உள்ளன. பல

நோய்களை கட்டுபடுத்தும் மூலிகை செடிகள் குறித்து, மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. ஓரின தாவரங்களை பாதுகாக்க பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்தி, மூலிகை செடிகளை அழித்து வருகின்றனர்.

“இதனால், பல முக்கிய மூலிகை செடிகள் அழியும் நிலையில் உள்ளன. மூலிகை செடிகளின்

மகத்துவத்தை அறிந்து, அதனை பாதுகாக்கவும், பொருளாதார அளவில் மூலிகை செடிகளை வளர்க்கவும் மாணவர்களும் முன் வரவேண்டும்,” என்றார்.

## கேரட் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் கேரட் விவசாயம் களைக்கட்டியுள்ளது. கோத்தகிரியில், தேயிலைக்கு அடுத்தபடியாக, கேரட், முட்டைகோஸ், பீன்ஸ், உருளைக்கிழங்கு உள்ளிட்ட, மலைக்காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அதில், பனித்தாக்கினாலும் பாதிப்படையாத கேரட், நெடுகுளா, கூக்கல்தொரை, சுள்ளிகூடு ஊட்டி பாலாடா மற்றும் கப்பச்சி பள்ளத்தாக்கு பகுதிகளில், அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக, ஒரு கிலோ கேரட், 50 ரூபாய்க்கு குறையாமல் விலைக் கிடைத்துவருகிறது. இனிவரும் நாட்களில் வறட்சியான காலநிலை நிலவும் பட்சத்தில், மேலும், விலை உயர வாய்ப்புள்ளது என, நம்பப்படுவதால், கூடுதல் கவனம் செலுத்தி, விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

## 'பீச்' மரங்களில் வண்ணப் பூக்கள்

மஞ்சூர்: மஞ்சூர் பகுதிகளில் 'பீச்' பழ சீசன் துவங்கியதை ஒட்டி, மரங்களில் பூக்கள் பூத்துள்ளன.

மஞ்சூர் பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஊடு பயிராக, சில இடங்களில் 'பீச்' உட்பட பல்வேறு பழ மரங்களும் விளைவிக்கப்படுகின்றன.

தற்போது, பீச் பழ சீசன் துவங்கியிருப்பதால், மரத்தில் பூக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இந்த பூக்கள் மூன்று மாதம் இடைவேளையில் பீச்காயாக மாறிவிடும். இந்த பழத்துக்கு, கிலோ ஒன்றுக்கு, 50 ரூபாய் வரை விலை கிடைக்கிறது.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில்குறையாத முருங்கை விலை

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் பல காய்களின் விலை இறங்கு முகமாக காணப்பட்ட போதிலும், முருங்கை விலை மட்டும் குறையாமல் கிலோ ரூ.110 க்கு மேல் விற்கிறது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த தொடர் மழை காரணமாக காய்கறி விளைச்சல் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் காய்கறி விலை என்றும் இல்லாத அளவிற்கு அதிகரித்து காணப்பட்டது.

தற்போது தக்காளி, வெங்காயம் <<உட்பட பல காய்களின் வரத்து அதிகரிக்க தொடங்கி <உள்ளது. இதன் காரணமாக அவற்றின் விலை இறங்குமுகமாக காணப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.30க்கு விற்ற தக்காளி, தற்போது ரூ.6க்கும், ரூ.50க்கு விற்ற வெங்காயம் ரூ.25 க்கும் விற்கிறது.

இருந்த போதிலும் உள்ளூர் முருங்கை வரத்து இல்லாததால், பரோடாவில் இருந்துதான் லாரிகளில் கொண்டு வரப்படுகிறது.

அதனை கொண்டு வர செலவு அதிகம் ஆகிறது. இதனால் இவ்வகை முருங்கை விலை, குறையாமல் கிலோ ரூ.110க்கு மேல் விற்கிறது.

கமிஷன் கடை உரிமையாளர் மூர்த்தி கூறுகையில், "" இன்னும் சில நாட்களில் உள்ளூர் முருங்கை வரத்து தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அடுத்து வரும் நாட்களில் முருங்கை விலையும் குறைவதற்கான வாய்ப்புள்ளது," என்றார்.

**பச்சை பீன்ஸ் கிலோ ரூ.50 :மகசூல் அதிகரிப்பால் மகிழ்ச்சி**

ரெட்டியார்சத்திரம்:ரெட்டியார்சத்திரம் பகுதியில் பச்சைபீன்ஸ் மகசூல் அதிகரித்துள்ள சூழலில், கிலோ 50 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

காமாட்சிபுரம், மெய்ஞானபுரம், பங்காருபுரம், எல்லைப்பட்டி, பலக்கனூத்து உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் பச்சைபீன்ஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சமீபத்திய மழையால் கடந்த சீசனைவிட, தற்போது மகசூல் அதிகரித்துள்ளது. விளைந்துள்ள பீன்ஸ் காய்களில் சேதம், பாதிப்படைந்தவற்றின் தன்மையும் கடந்தாண்டைவிட கணிசமான அளவில் குறைந்துள்ளது.

இந்நிலையில் விலையும் ஓரளவு உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். காமாட்சிபுரம் விவசாயி துரை கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு 18 முதல் 22 கிலோ விதை தேவைப்பட்டது. சாதா, ஒட்டுரக பீன்ஸ் கிலோ 400 ரூபாய்க்கும், வீரிய ரக பீன்ஸ் 800 ரூபாய்க்கும் வாங்கினோம். இரு மாதங்களுக்கு முன் நடவு செய்தோம். தற்போது அறுவடை நிலையில் உள்ள பச்சைபீன்ஸ், நன்கு வளர்ந்து காய்த்துள்ளது. இவை திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. கிலோ ரூ.50க்கு கொள்முதல் செய்யப்படுவதால், கடந்தாண்டு பாதிப்பை சரிக்கட்டிவிடும் வாய்ப்பு உள்ளது," என்றார்.

**பீன்ஸ் கிலோ ரூ.25**

போடி;மாவட்டத்தில் "பீன்ஸ்' விளைச்சல் அதிகரித்துள்ளதால் கடந்த மாதத்தை விட விலை குறைந்து கிலோ ரூ. 25 க்கு விற்பனை செய்யப்படுகிறது. மாவட்டத்தில் பாலார்பட்டி, சங்கராபுரம், புலிகுத்தி, மார்க்கையன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் "பீன்ஸ்' அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இதைப் பொருத்தவரை பனிக்காலமான

கார்த்திகை, மார்கழி, தை மாதம் சீசனாகும். இரண்டு மாதங்களுக்கு முன் "பீன்ஸ்' சீசன் துவக்கத்தில் கிலோ ரூ. 45 முதல் ரூ. 50 வரை விற்கப்பட்டது. விவசாயிகளிடம் மொத்தமாக வாங்கிய வியபாரிகள், சில்லரையில் கிலோ ரூ. 60 வரை விற்பனை செய்தனர்.

கடந்த மாதம் கிலோ ரூ. 40 க்கு வாங்கி சில்லரையில் ரூ.50க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது பீன்ஸ் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகளிடம் கிலோ ரூ.20 க்கு வாங்கி சில்லரையில் கிலோ ரூ. 25க்கு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்.

விலை குறைந்து பறிப்பு கூலிக்கு கூட கட்டுபடியாகாத நிலையில் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## முருங்கைமரம் பட்டுப்போவதை தடுப்பது எப்படி?

பெரியகுளம்;தேனி மாவட்டத்தில் முருங்கை மரங்களில் நோய் பாதிப்பில் இலைகள் உதிர்ந்து, மரம் பட்டுபோவதை தடுக்க பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலைய பேராசிரியர் சுரேஷ் ஆலோசனை வழங்கி உள்ளார்.

மாவட்டத்தில் பெரியகுளம், ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு, கம்பம், போடி பகுதிகளில் பரவலாக முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரை சீசன் காலங்களில் தினமும் 70 முதல் நூறு டன் முருங்கை காய்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. மாவட்டத்தில் முருங்கை மரங்கள் தேயிலை கொசுவின் தாக்குதலினால், இலைகள் உதிர்ந்து அதிக இடங்களில் பட்ட மரங்களாக காட்சியளிக்கிறது. பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பூச்சியல்துறை பேராசிரியர் சுரேஷ் மற்றும் ஆய்வுக்குழுவினர் இதை கட்டுப்படுத்தும் முறைகள் கண்டுபிடித்துள்ளனர். அதிகம் பாதிப்புக்குள்ளான கடமைலக்குண்டு பாலூத்து பகுதியில் விவசாயிகளை சந்தித்து விளக்கியுள்ளனர்.

பேராசிரியர் சுரேஷ் கூறியதாவது: தேயிலை கொசு சாறு உறிஞ்சும் பூச்சி. இது முருங்கை, தேயிலை, கொட்டைமுந்திரி, கோ கோ, கொய்யா மற்றும் வேப்பமரங்களில் அதிக அளவில் தாக்குகிறது. குறிப்பாக முருங்கையில் இதன் தாக்கம் அதிகம். நாவாய்பூச்சி இனத்தை சார்ந்தது. உருவத்தில் கொசுவைப் போன்று உள்ளதாலும், தேயிலை செடியில் முதன் முதலில் கண்டறியப்பட்டதால் தேயிலை கொசு என அழைக்கப்படுகிறது. உடல் கருப்பு நிறத்திலும், முதுகு சிகப்பு மற்றும் வயிற்று பகுதி வெள்ளை நிற பட்டையாக காணப்படும். மேலும் முதுகு புறத்தில் மிக நுண்ணிய குண்டு ஊசியை அடித்ததுபோல் இருக்கும். இளம் மற்றும் முதிர்ச்சி அடைந்த தேயிலை கொசுவானது, அதனுடைய ஊசி போன்ற வாய் பகுதியிலிருந்து

முருங்கையின் இளம் தளிர்கள், மொட்டுகள் மற்றும் குறுத்துகளில் சாற்றினை உறிஞ்சுகிறது. மேலும் ஒரு வித நச்சு திரவத்தையும் சுரப்பதால், குருத்துக்கள் முற்றிலும் வாடிவிடுகிறது. ஒரு லிட்டர் நீரில் வேப்பஎண்ணெய் 3 சதவீதம் அல்லது வேப்பம்கொட்டை சாறு 5 சதவீதம் தெளித்து தாக்குதலை குறைக்கலாம். ஊடுருவிப்படியக்கூடிய மருந்து ரகங்களான டைமீத்தோயேட் ஒரு லிட்டருக்கு 2மில்லி, அதே அளவுகளில் புரபனோபாஸ், தயோக்ளோப்ரிட் ஏதேனும் ஒன்றை அடித்து கட்டுப்படுத்தலாம், என்றார்.

## மாடுகளுக்கான ஆம்புலன்ஸ் வழங்க வேண்டும்: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்

சேலம்: 'மனிதர்களுக்கு 108 ஆம்புலன்ஸ் இருப்பது போல், கால்நடைகள் உடல் நலம் சரியில்லாதபோது அழைத்து செல்வதற்கான ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட வேண்டும்' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் விவசாயிகள் பேசிய விபரம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் சுந்தரம்: ஓமலூரில் ரயில்வே கிராஸிங் வழியாக, விவசாயிகள் செல்லும் வாகனங்களை போலீசாரும், அதிகாரிகளும் மாற்றுப்பாதையில் செல்லுமாறு திருப்பி விடுகின்றனர். இதனால், அவர்களுக்கு நேரச்செலவு அதிகமாகிறது. தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை எடுத்து செல்வதற்கான பாதை அது மட்டுமே உள்ளது. திடீரென மாற்று வழியில் செல்லுமாறு தடுத்தால் என்ன செய்வார்கள்.

ஐக்கிய விவசாயிகள் சங்க தலைவர் வையாபுரி; ஆறகளூரில் என்னுடைய வீடு இருக்கும் தெரு, சில ஆண்டுகளுக்கு முன் நீண்டு, விரிந்த நிலையில் இருந்தது. தற்போது, தெருவையே ஆக்கிரமித்து வீடு கட்டுகின்றனர். மாவட்ட அதிகாரிகளிடம் கூறினாலும், பார்க்கலாம் என்கின்றனர், அதன் பின்னர் எதுவும் செய்வதில்லை. இங்கு மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இந்த நிலை தான் உள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் எடுக்க வேண்டும்.

பனமரத்துப்பட்டி விவசாயி சண்முகம்; கால்நடைகளுக்கென அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதி உள்ளது என கேள்விப்பட்டோம். அனைத்து பகுதிகளுக்கும், அந்த கருவியை வழங்கினால், மாடு சினை பிடித்திருக்கும்போது, கன்று நிலை என்னவென்பதை விவசாயிகள் தெரிந்து கொள்ள முடியும். அதேபோல், மனிதர்கள் நோய்வாய்பட்டால், 108 ஆம்புன்ஸ் மூலம் எடுத்து செல்ல வாய்ப்புள்ளது. கால்நடைகள் உடல் நிலை சரியில்லாமல் போனால், அவற்றை நடத்தி அழைத்து கொண்டு போக முடியாது. மனிதர்களுக்கு போல், கால்நடைகளுக்கும் தனியாக ஓர் ஆம்புலன்ஸ் வசதி வேண்டும்.

கால்நடைத்துறை இணை இயக்குனர் சுந்தரராஜன்: அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் ஒன்று, 7 லட்சம் ரூபாய். தற்போதைய நிலையில், நான்கு, ஐந்து கால்நடை மருத்துவமனையில் உள்ளது. விரைவில் அனைத்து பகுதிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆம்புலன்ஸ் வாகனத்தை, ஏற்கனவே ஒரு சில மாவட்டங்களில் முதல்வர் வழங்கி உள்ளார். சேலம் மாவட்டத்துக்கும் வழங்க அரசிடம் வலியுறுத்தப்படும். கூட்டத்தில், கலெக்டர், டி.ஆர்.ஓ., கலந்து கொள்ளவில்லை. இதனால், விவசாயிகளின் குறைகளை, மேடையில் இருந்த அதிகாரிகள், பெயரளவுக்கு மட்டுமே காது கொடுத்து கேட்டனர். வேளாண்துறை, கால்நடைத்துறை, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவமனை: விவசாயிகள் வேண்டுகோள்

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் ஒன்றியத்தில், கிராமங்கள்தோறும் கால்நடை மருத்துவமனை அமைக்கக்கோரி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பள்ளிபாளையம் ஒன்றியம், ஏராளமான கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. இங்கு விவசாயிகள் ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். கால்நடைகளுக்கு மேய்ச்சல் மற்றும் பசுத்தீவனம் கிடைத்தாலும் பருவ மாற்றம், தட்ப வெப்ப சூழ்நிலை போன்ற பல்வேறு காரணங்களால் கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் பால் உற்பத்தி பாதிப்பு, வருமானம் குறைவு, மருத்துவ செலவு போன்றவற்றால் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர். கடந்த மாதம், ஒட்டமெத்தை பகுதியில் வரதராஜ் என்ற விவசாயிக்கு சொந்தமான, நான்கு மாடுகள் மர்ம நோய் தாக்கி இறந்தன. கால்நடை மருத்துவமனை இருந்தாலும், கிராமம்தோறும் இல்லாததால், ஐந்து கி.மீ., தூரத்துக்கு

சென்று தான் சிகிச்சை அளிக்க வேண்டும். 'அவ்வளவு தூரம் ஏன் செல்ல வேண்டும்' என, விவசாயிகள் மருந்து கடையில் ஊசி வாங்கி தாங்களே கால்நடைக்கு போடுகின்றனர். எனவே, 'கிராமங்கள் தோறும் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்' என, அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனார்.

## மிளகாய்,வாழைக்கு இன்சூரன்ஸ்:வேளாண் காப்பீட்டு நிறுவனம் தகவல்

சிவகங்கை;சிவகங்கை மாவட்டத்தில் 2015-16ம் ஆண்டு ராபி பருவத்தில் சாகுபடி செய்துள்ள மிளகாய், வாழை பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பிரிமியதொகை செலுத்தி காப்பீட்டு திட்டத்தில் சேரலாம்.

தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளதாவது: மாவட்டத்தில் மிளகாய் பயிர் 10 ஆயிரம் ஏக்கரிலும், வாழை 1250 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர் அதிகம் பயிரிடப்படும் வட்டாரங்களான சிவகங்கை, இளையான்குடி, காளையார்கோவில், மானாமதுரை, சிங்கம்புணரி, எஸ்.புதூர், மற்றும் திருப்புவனம் வட்டாரங்களில் பயிர் வாரியாக தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மிளகாய்: இளையான்குடி, காளையார்கோயில், எஸ்.புதூர், திருப்புவனம்.பிரிமிய தொகை: ஏக்கருக்கு இயல்பான காப்பீட்டு தொகை ரூ.5931.காப்பீட்டு திட்டத்தில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.326, கடன் பெறாத விவசாயிகள் ரூ. 294 செலுத்த வேண்டும்.வாழை: ஒக்கூர் பிர்க்கா, பெரியகோட்டை, சிவகங்கை, தமறாக்கி. அ.திருஉடையார்புரம் பிர்க்கா,புளியால், மானாமதுரை,முத்தனேந்தல், செய்களத்தூர் பிர்க்கா,

சாக்கோட்டை பிர்க்கா.சிங்கம்புணரி பிர்க்கா, கொந்தகை, திருப்பாச்சேத்தி, திருப்புவனம் பிர்க்கா.

பிரிமிய தொகை: ஏக்கருக்கு இயல்பான காப்பீட்டு தொகை ரூ.2,68,549. காப்பீட்டு திட்டத்தில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.7385, கடன் பெறாத விவசாயிகள் ரூ.6,647 பிரிமியம் செலுத்த வேண்டும்.காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் பயிர் விதைத்த அல்லது நடவு செய்த ஒரு மாத காலத்திற்குள் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய வங்கியில் பிரிமிய தொகையை செலுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மக்காச் சோளத்திற்கு கிடைத்தது உரிய விலை:"தினமலர்' செய்தி எதிரொலி

சிவகாசி;" தினமலர் ' செய்தி எதிரொலியாக மக்காச் சோளத்திற்கு உரிய விலை கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி உள்ளிட்ட பகுதியில் விளைந்த மக்காச் சோளத்திற்கு போதிய விலை கிடைக்கவில்லை. மூன்று மாதம் முன் வரை குவிண்டாலுக்கு ரூ. 1650 விற்ற மக்காச்சோளம் தற்போது ரூ. 400 வரை குறைந்து ரூ. 1200 க்கு விற்கப்பட்டது.

இதற்கு வியாபாரிகளே காரணமாக கூறப்பட்டது. விலை குறைவான நேரத்தில் வாங்கி பதுக்கி வைத்து விலை ஏற்ற நேரத்தில் நல்ல விலைக்கு விற்க முயல்வதால் ஏற்படும் விளைவே, மக்காச்சோளம் விலையில் சரிவு ஏற்படுவதாக விவசாயிகள் குற்றச்சாட்டுகின்றனர்.

உடன்படிக்கை

இது தொடர்பாக கடந்த 20ல் "தினமலர் 'நாளிதழில் செய்தி வெளியானது. இதை தொடர்ந்து கலெக்டர் ராஜாராமன் தலைமையில் முத்தரப்பு கூட்டம் நடந்தது. விவசாயிகள், அதிகாரிகள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர். இதில் சுகுணா புட் இன்டஸ்டரியஸ்

நிறுவனம் ஒரு குவிண்டால் மக்காச்சோளத்திற்கு அதிகபடியாக ரூ. 1,550 வரை விலை கொடுக்க முன்வந்தன . அந்த நிறுவனத்திற்கே மக்காச்சோளம் விற்பனை செய்வதாக விவசாயிகள் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

இதனால் ரூ. 1200 க்கு விற்ற மக்காச்சோளத்திற்கு உரிய விலை கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். செய்தி வெளியிட்ட " தினமலர் ' நாளிதழுக்கும் நன்றி தெரிவித்தனர்.மேலும் ,"மக்காச்சோளத்தின் அன்றைய விலை அறிய 88826 32002 என்ற

@டால்பிரி எண்ணில் இலவசமாக தொடர்பு கொள்ளலாம்' என , வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மரக்கன்று நட்டு 3 ஆண்டுகள் பராமரிக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் சென்னை மாநகராட்சி அறிவிப்பு




சென்னை

சொந்த செலவில் மரக்கன்றுகள் நட்டு 3 ஆண்டுகள் வரை பராமரிக்க ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

பசுமை போர்வை

முதல்–அமைச்சர் ஜெயலலிதா, சென்னை மாநகரின் பசுமை போர்வையை அதிகரிக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் ஆர்வம் உள்ள தனியார்கள், தொண்டு நிறுவனங்கள், பொதுநல அமைப்புகள் மற்றும் குடியிருப்போர்

நலச்சங்கங்கள் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பஸ் போக்குவரத்து சாலைகள், உட்புறச்சாலைகள், தெருக்கள் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நீர்நிலைகள், நீரோட்டங்களின் கரைகள், விளையாட்டு மைதானங்கள், பள்ளி வளாகங்கள், மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், சென்னை மாநகராட்சி பராமரிக்கும் இடுகாடு மற்றும் சுடுகாடு, மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றில் நிழல்தரும், பலன்தரும் மரங்களை சொந்த செலவில் நடவு செய்யலாம்.

இப்பணியில் விருப்பமுள்ளவர்கள் தங்களுக்கு உகந்த ராசி, நட்சத்திர மரங்களையும், தங்களின் நெருங்கிய மனிதர்களின் பிறந்த, திருமணநாள் மற்றும் இறந்தோர் நினைவாக அவர்கள் கோரும் இடத்திலேயே இந்த மரங்களை நட்டு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பராமரிக்க ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:–

<u>சென்னை மாநகராட்சியிடம் அனுமதி</u>

தேர்வு செய்யும் மரம் குறைந்தபட்சம் 10 அடி வளர்ந்த மரக்கன்றுகளாக இருக்கவேண்டும். மரத்தை பாதுகாக்க அமைக்கப்படும் கூண்டு தரையில் இருந்து 7½ அடி உயரம் இருக்கவேண்டும். தரைக்கும், கூண்டிற்கும் ½ அடி இடைவெளி இருக்கவேண்டும். கூண்டின் விட்டம் 1½ அடியாக இருக்க வேண்டும். விளம்பரம் செய்ய 2–க்கு 2 அடி இருக்கவேண்டும். இதில் 4–ல் ஒரு பங்கு மாநகராட்சி விளம்பரம் இருக்க வேண்டும். விளம்பரத்தில் இடம்பெறும் வாசகம் மற்றும் படங்களுக்கு சென்னை மாநகராட்சியின் அனுமதி பெறவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மரம் நட விரும்புவோர் சென்னை மாநகராட்சியின் அதிகாரபூர்வ இணையதளத்தில் (www.chennaicorporation.gov.in) உள்ள இதற்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் மல்லிகைப்பூ கிலோ ரூ.700–க்கு விற்பனை**



திண்டுக்கல்,

திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் மல்லிகைப்பூ கிலோ ரூ.700–க்கும், அதிக வரத்தால் செண்டுமல்லி கிலோ ரூ.10–க்கும் விற்பனை ஆனது.

<u>கிலோ ரூ.700</u>

திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு, திண்டுக்கல்லை அடுத்த வெள்ளோடு, அனுமந்தராயன்கோட்டை உள்பட பல்வேறு கிராம பகுதிகளில் இருந்து மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம். கடந்த 3 மாதங்களாக மல்லிகைப்பூவின் வரத்து குறைந்துள்ளது.

பொங்கல் மற்றும் முகூர்த்த நாட்களில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1000–க்கு மேல் விற்பனை ஆனது. நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.700–க்கு விற்பனை ஆனது.

இதுகுறித்து பூவியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>வரத்து குறைவு</u>

பனிக்காலத்தில் மல்லிகையின் வரத்து குறைவது வழக்கம். ஆனால் இந்த வருடம் அதிகளவில் வரத்து குறைந்து விட்டது. அதுமட்டுமின்றி விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட மல்லிகையில் பெருமளவு கேரளாவிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதனால் இங்கு தேவை அதிகரித்துள்ளது. இதுதவிர கடந்த 2 மாதங்களாக முல்லைப்பூ வரத்து நின்று விட்டது. அதனால் மல்லிகை, கனகாம்பரம், ஜாதிப்பூ, இவற்றின் விலை குறையவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மார்க்கெட்டில் ஒரு கிலோ ஜாதிப்பூ ரூ.600–க்கும், கனகாம்பரம் ரூ.350, சம்பங்கி ரூ.60, கோழிக்கொண்டை, செவ்வந்தி ஆகியவை தலா ஒரு கிலோ ரூ.50–க்கும், ரோஜா ரூ.40, வாடாமல்லி ரூ.20, செண்டு மல்லி ரூ.10–க்கும் விற்பனை ஆனது.

**தோவாளை மார்க்கெட்டில் முல்லை பூ விலை ரூ.800 உயர்வு ஒரு கிலோ ரூ.1000–க்கு விற்பனை**



நாகர்கோவில்,

தோவாளை பூ மார்க்கெட்டில் முல்லை பூ விலை நேற்று ரூ.800 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1000–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>பூ மார்க்கெட்</u>

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது.

விவசாயிகள் அதிகாலையிலேயே பூக்களை கொண்டுவருவதால், வியாபாரிகளும் அதிகாலையிலே மார்க்கெட்டிற்கு வந்துவிடுவார்கள். இதனால் அதிகாலையிலோ வியாபாரம் தொடங்கிவிடும். பூக்கள் இங்கு சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். இதனால் மார்க்கெட் அதிகாலையில் இருந்து பரபரப்பாக இருக்கும்.

<u>முல்லை விலை உயர்வு</u>

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனை செய்யப்பட்ட முல்லை பூ, நேற்று விலை ரூ.800 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1000–க்கு விற்பனை செய்யப்பட்டது. முல்லை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் '' இன்று (நேற்று) வெள்ளிக்கிழமை என்பதாலும், முகூர்த்த தினம் என்பதாலும் முல்லை பூவின் தேவை அதிகமாக இருந்தது. அதே சமயம் முல்லை பூவின் வரத்து மார்க்கெட்டிற்கு குறைவாக இருந்தது. இதனால் குறைந்த அளவில் இருந்த பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் விலை உயர்ந்து காணப்பட்டது'' என்று கூறினார்.

<u>விலை விவரம்</u>

மேலும், மற்ற பூக்களின் விலை விவரம் வருமாறு:– பிச்சி ரூ.1400–க்கும், மல்லிகை ரூ.1000–க்கும், கனகாம்பரம் ரூ.350–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.100–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.100–க்கும், பட்டன்ரோஸ் ரூ.90–க்கும், கொழுந்து ரூ.80–க்கும், சம்பங்கி ரூ.80–க்கும், அரளி ரூ.40–க்கும், வாடாமல்லி ரூ.40–க்கும், கேந்தி ரூ.30–க்கும், துளசி ரூ.25–க்கும், மஞ்சள்கேந்தி ரூ.15–க்கும், மாம்பழ கேந்தி ரூ.10–க்கும், பச்சை ரூ.6–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.200–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.30–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**வேளாண் கருவிகள் வாடகை மையம் கலெக்டர் தொடங்கி வைத்தார்**



தேவகோட்டை,

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் தேர்போகியில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் கருவிகள் வாடகை மையத்தை மாவட்ட கலெக்டர் மலர்விழி திறந்து வைத்தார்.

<u>வாடகை மையம்</u>

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டம், தேர்போகி ஊராட்சியில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் கருவிகள் வாடகை மைய தொடக்க விழா நடந்தது. வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் கேசவன் அனைவரையும் வரவேற்றார். இந்த விழாவிற்கு மாவட்ட கலெக்டர் மலர்விழி தலைமை தாங்கி பேசியதாவது:–

மாவட்டத்தில் முக்கியப் பயிரான ''நெல் பயிர்'' மற்றும் பயறு வகைகள், தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் சேகரித்து அனைத்து விவசாயிகளுக்கும்

நியாயமான வாடகையில் கிடைக்க ‘‘வேளாண் கருவிகள் வாடகை மையம்’’ உருவாக்கப்பட்டுள்ளது.

<u>மானியம்</u>

இந்த மையத்தின் சார்பாக விவசாயிகளுக்கு ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளின் குழுமம் அமைக்கப்பட்டு, அந்த மையத்திற்கு அரசு மானியமாக ரூ.10 லட்சம் வழங்க உள்ளது. இந்த மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களை விவசாயிகள் நியாயமான வாடகைக்கு பெற்று தங்களுடைய அனைத்து வேளாண் பணிகளையும் தடையின்றி மேற்கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் செல்விபாண்டி, தேர்போகி ஊராட்சி தலைவர் தனபாக்கியம், விருதுநகர் கண்காணிப்புப் பொறியாளர் (வேளாண்மை) தெய்வேந்திரன், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் குருமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி செயற்பொறியாளர் மனோகர்ஹென்றி சத்யசீலன் நன்றி கூறினார்.

**முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கும் தண்ணீர் அளவை குறைக்கவேண்டும் விவசாயிகள் கூட்டத்தில் தீர்மானம்**



உத்தமபாளையம்

உத்தமபாளையத்தில் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. இதற்கு தலைவர் தர்வேஸ்மைதீன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் தற்போதைய சூழலில் முல்லைப்பெரியாறு அணை பகுதியில் போதிய மழை இல்லை. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்வதற்கு வாய்ப்பு இல்லை. பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணையில் இருந்து 1,178 கன அடி தண்ணீரை வெளியேற்றுகின்றனர்.

இதே நிலை நீடித்தால் விவசாயத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் கருகிவிடும். எனவே அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை 500 கனஅடியாக குறைக்கவேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் செயலாளர் சகுபர் அலி மற்றும் நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், ராமசுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேவையற்ற முடிகளை அகற்றும் மஞ்சள்




உணவில் சேர்க்க கூடியதும், கிருமி நாசினியாக விளங்குவதும், தேவையற்ற முடிகளை அகற்றும் தன்மை கொண்டதும், ஏராளமான நன்மைகளை உள்ளடக்கியதுமான மஞ்சளின் மருத்துவ குணங்கள் பற்றி நாம் பார்ப்போம்.பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட மஞ்சள் அற்புதமான வலி நிவாரணியாக பயன்படுகிறது. சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. வீக்கத்தை கரைக்க கூடியது. வலியை குறைக்கவல்லது. ஈரலுக்கு இது ஆரோக்கியத்தை தருகிறது.

ஈரல் நோய்களை போக்குகிறது. ஈரலை நோய் தாக்காமல் பாதுகாக்கிறது. புற்றுநோய் வராமல் தடுக்கும் மருந்தாக மஞ்சள் விளங்குகிறது. தோல் நோய்களை குணப்படுத்துகிறது. பச்சையான மஞ்சள் கிழங்கை பயன்படுத்தி சர்க்கரை நோயாளிகளுக்கான தேனீர் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: பச்சை மஞ்சள் கிழங்கு, நெல்லி வற்றல் பொடி. தோல் நீக்கப்பட்ட மஞ்சள் கிழங்கு பசை அரை

ஸ்பூன்எடுக்கவும்.

இதனுடன் ஒரு ஸ்பூன் நெல்லி வற்றல் பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி 50 முதல் 100 மில்லி வரை குடித்துவர ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். உடலுக்கு புத்துணர்வு ஏற்படும். கொழுப்பு சத்து குறையும். ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படாது. பச்சை மஞ்சள் கிழங்கை பயன்படுத்தி முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை அகற்றும் மருந்து தயாரிக்கலாம்.

சிறிது அரிசி மாவுடன், மஞ்சள் கிழங்கு பசையில் இருந்து எடுக்கப்பட்ட சாறு சேர்த்து கலக்கவும். தேவையற்ற முடிகள் இருக்கும் இடத்தில் இதை பூசவும். இரவு முழுவதும் விட்டு காலை எழுந்தவுடன் கழுவிவர தேவையற்ற முடிகள் போகும். மஞ்சள் கிழங்கை பயன்படுத்தி கால் ஆணிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: மஞ்சள் கிழங்கு, வசம்பு பொடி, புங்க எண்ணெய், கற்பூரம், மருந்தாணி பொடி. சிறிது புங்க எண்ணெயுடன், அரைத்து வைத்த மஞ்சள் விழுதை சேர்க்கவும். இதனுடன் சிறிது கற்பூரம், மருதாணி இலைப்பொடி, வசம்பு பொடி சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்ச வேண்டும். இதை ஆற வைத்து வடிக்கட்டி வைத்துக்கொண்டு பூசினால் கால் ஆணி சரியாகும். கால் ஆணியால் ஏற்படும் வலி மறையும்.

வடு இல்லாமல் போகும்.மஞ்சள் கிழங்கை பயன்படுத்தி அடிபட்ட வீக்கத்துக்கான மருந்து தயாரிக்கலாம். மஞ்சள் கிழங்கு விழுதுடன் சிறிது உப்பு சேர்க்கவும். இதனுடன் நீர்விட்டு கலந்த சுண்ணாம்பு சேர்க்கவும். லேசாக சூடு செய்யவும். இதை எடுத்து பற்றாக போடும்போது அடிப்பட்ட வீக்கம், சுளுக்கு சரியாகும். மஞ்சளில் பல்வேறு நன்மைகள் உள்ளன. மஞ்சளில் ஊட்டச்சத்து அதிகம் உள்ளது. உணவில் சேர்க்கப்படும் மஞ்சள் கிருமி நாசினியாக விளங்குகிறது.